## அரசாங்க சேவையின் கனிஷ்ட ஊழியர்களை அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இற்கு தரம் உயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை –2007

2007.05.25 ஆந் தேதிய 1499 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவையின் கனிஷ்ட ஊழயர்களை அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு 111 இற்கு தரம் உயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலின் இலக்கம் 17:IV கீழ் காட்டப்படும் வினாத்தாள்களின் கட்டமைப்பு பின்வருமாறு அமைந்துள்ளதென பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

* இவ் வினாத்தாள்கள் இரண்டு வினாக்களைக் கொண்டிருக்கும்
  (1) பொது அறிவு
  (2) நுண்ணறிவுப் பரீட்சை

* ஒவ்வொரு பாடத்துக்குமான பரீட்சைக்கான பாட விபரங்கள், புள்ளிகள், ஒதுக்கப்பட்ட கால அளவு என்பன பின்வருமாறு அமைந்துள்ளன.

(1) பொது அறிவு

காலம் – இரண்டு மணித்தியாலங்கள்

புள்ளிகள் – 100 புள்ளிகள்

வினாத்தாள்களுக்கான பாடவிதானங்கள் – இவ் வினாத்தாளானது பரீட்சார்த்தியொருவரின் சமூகம், பண்பாடு, கல்வி, விஞ்ஞானம், அரசியல், பொருளியல், மற்றும் ஏனைய தொடர்புடைய காரணிகள் (தேசிய ரீதியான மற்றும் சர்வதேச ரீதியான) தொடர்பான விடயங்களில் உள்ள அறிவையும், புரிந்துணர்வையும் பரிசோரிக்கும் வகையிலான வினாக்களைக் கொண்டமைந்திருப்பதுடன் அவர்களுடைய எழுத்தாற்றலையும் அது தொடர்பான திறமையையும் பரிசோதிக்கும் வகையிலும் சில வினாக்கள் அமைந்திருக்கும்.

வினாத்தாளின் கட்டமைப்பு

| | | |
|---|---|---|
| பகுதி I | 40 பல்தேர்வு வினாக்கள் | (40 புள்ளிகள்) |
| பகுதி II | 30 சுருக்க விடையளிக்கும் வினாக்கள் | (60 புள்ளிகள்) |
| | | 100 புள்ளிகள் |

(2) நுண்ணறிவுப் பரீட்சை

காலம் – 1 மணித்தியாலம்

புள்ளிகள் – 100 புள்ளிகள்

வினாத்தாளுக்கான பாட விதானங்கள் – இவ் வினாத்தாளானது பரீட்சார்த்தி யொருவரின் எண்கள் தொடர்பான அறிவு பகுத்தறியும் திறன் மற்றும் பொது அறிவு போன்றவற்றைப் பரிசோதிக்கும் வகையில் அமைந்திருக்கும்.

வினாத்தாளின் கட்டமைப்பு – 50 பல்தேர்வு வினாக்கள் (100 புள்ளிகள்)

ஏ.நோபட்,
இணைந்த சேவை பணிப்பாளர் நாயகம்

2007. ஆகஸ்ட் மாதம் 24 ஆந் திகதி,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
கொழும்பு 07.